பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 13 சனிக்கிழமை 26.03.2022 கதிர் 10

## ஜெய்சங்கரின் இலங்கை வருகை உறுதி

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரின் இலங்கை பயணம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் எதிர்வரும் 28 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார். 30ஆம் திகதிவரை அவர் நாட்டில் தங்கியிருப்பார்.

2

# அன்று ஆயுதத்தால் கொன்றழித்தாய்; இன்று பட்டினியால் அழிக்கின்றாய்!

## பொருள்கள் விலையேற்றத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் முன்னணி போராட்டம்

**அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் யாழ்ப்பாணத்தில் இன்று கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

**யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக இன்று காலை 10 மணி முதல் 11 மணி வரையான ஒரு மணித்தியாலம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.**

2



## உறவுகள் மீதான தாக்குதலுக்கு சர்வதேச நீதி கோரி போராட்டம்

### யாழில் ஏப்ரல் 3இல் நடத்தத் தீர்மானம்

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு சர்வதேசத்திடம் நீதி கோரி யாழ்ப்பாணத்தில் கண்டனப் பேரணியை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான கலந்துரையாடல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்புக்களின் தலைமையில் இன்று காலை 10 மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

கலந்துரையாடலுக்குப் பின்னர் கண்டனப் பேரணி

2

## அரசை வீழ்த்துவதற்கு இரு முனைத்தாக்குதல்

### முன்னாள் அமைச்சர் கம்மன்பில சூளுரை



இந்த அரசை வீழ்த்துவதற்கு இரு முனைத்தாக்குதல் தொடுக்கப்படும் என்று புதிய ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

ஒன்று பாதீட்டை தோற்கடிப்பதன் மூலம் அரசை கவிழ்க்கலாம், இரண்டாவது, அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:-

2

## செவ்வாய்க்கிழமை முதல் ரயில் கட்டணமும் எகிறும்

### போக்குவரத்து அமைச்சர் தகவல்

எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் ரயில் கட்டணம் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. ரயில் கட்டண அதிகரிப்பு தொடர்பில் அமைச்சரவைக்குத் தெளிவுபடுத்திய பின்னர் செவ்வாய் முதல் கட்டணம் அதிகரிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பஸ் கட்டணங்களுக்கு நிகராக ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

## சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை வெளியீடு திங்கள் அமைச்சரவையில்!

### நாடாளுமன்றத்திலும் விவாதம் நடத்த முடிவு

இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை வெளிவந்துள்ள நிலையில், அது எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையிலும் அதன்பின்னர் நாடாளுமன்றத்திலும் முன்வைக்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பான பகுப்பாய்வுகள், புள்ளிவிவர ரீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கொரோனா இலங்கையின் பொருளாதாரத்தை கடுமையாக பாதித்ததுடன், இதனால் சுற்றுலா பயணிகளின் வருகை இழப்பு மற்றும் பல கடுமையான முடக்கங்கள் தேவைப்பட்டன

கொரோனாவின் தாக்கம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்துக்கும் அதிகமான நிதிப்பற்றாக்குறைக்கு வழிவகுத்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம், இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த நம்பகமான மற்றும் தெளிவான மூலோபாயம், சமூக பாதுகாப்பை அவசரமாக நடைமுறைப்படுத்துதல், பெறுமதிசேர் வரி மற்றும் வருமான வரிகள் அதிகரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்திலும் விவாதம் இடம்பெறவுள்ளது.

## அரசை எந்தத் தரப்பாலும் கவிழ்க்கவே முடியாதாம்!

### இராஜாங்க அமைச்சர் காஞ்சன கூறுகின்றார்



ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசை எந்தத் தரப்பாலும் கவிழ்க்கவே முடியாது என்று கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கையிருப்பு வீழ்ச்சிக்கு எதிர்க்கட்சியே காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

2015ஆம் ஆண்டு 8.2 வீதமாக இருந்த வெளிநாட்டுக் கையிருப்பு 2019இல்

2

## நீரில் மூழ்கிய பெண்ணைக் காப்பாற்ற சென்ற 2 இளைஞர்கள் பரிதாபச் சாவு!

தெஹியோவிட்ட, சீதாவக்க ஆற்றில் மூழ்கி இளைஞர்கள் இருவர் பலியாகியுள்ளனர்.

இராஜகிரிய மற்றும் கொழும்பு - 12 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 மற்றும் 21 வயதான இளைஞர்களே இவ்வாறு பலியாகியுள்ளனர்.

யாத்திரை மேற்கொண்ட குழுவினர், ஆற்றில் குளிக்கச் சென்ற போது பெண் ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார்.

பெண்ணைக் காப்பாற்றுவதற்கு முற்பட்ட இரண்டு இளைஞர்களும் நீரில் மூழ்கிய நிலையில், பிரதேச மக்களால் மூவரும் மீட்கப்பட்டனர்.

மூவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும், இரண்டு இளைஞர்களும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரின் சடலங்களும் அவிசாவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## ஜெய்சங்கரின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில் இவ்விடயம் தெரி



விக்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகள் 'பிம்ஸ்டெக்' அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

பிம்ஸ்டெக் அமைப்பின் அரச தலைவர்கள் மாநாடு கடைசியாக 2018இல் நேபாளம் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்றது. இம்முறை இலங்கையில் நடைபெறுகின்றது. இதில் பங்கேற்பதற்காகவே இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வருகின்றார்.

மாநாட்டில் பங்கேற்பதற்காக தாய்லாந்து பிரதமர் இலங்கை வரவுள்ளார். 'பிம்ஸ்டெக்' அமைப்பின் அடுத்த தலைமைப் பொறுப்பை தாய்லாந்தே ஏற்கவுள்ளது. அந்தப் பதவியைத் தாய்லாந்து பிரதமர் பொறுப்பேற்பார். ஏனைய நாடுகளின் பிரதமர்கள் 'காணொலி' தொழில்நுட்பம் ஊடாகவே மாநாட்டில் பங்கேற்பார்கள்.

அரச தலைவர்கள் மாநாடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் மார்ச் 30ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும்.

அத்துடன், 'பிம்ஸ்டெக்' அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்கேற்கும் மாநாடு - கலந்துரையாடல் மார்ச் 29 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

## அன்று ஆயுதத்தால் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது, எம் தேசத்தை அங்கீகரித்தால் உன் தேசமும் வளம் பெறும், அன்று ஆயுதத்தால் கொன்றழித்தாய்; இன்று பட்டினியால் அழிக்கின்றாய், சுயாட்சி இருந்தால் மட்டுமே தமிழரின் பொருளாதாரத்தை நாம் மேம்படுத்த முடியும், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமானால் தமிழர் தேசத்தை அங்கீகரி, ஆசியாவின் அதிசயமே பெற்றோல் இல்லை; டீசல் இல்லை; பால்மா இல்லை, இனவாதம், மதவாதத்தால் பொருளாதாரத்தை அழிக்காதே உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி சுகாஷ் மற்றும் கட்சியின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## உறவுகள் மீதான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் செயலாளர் அ.லீலாவதி கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பிக்கும் கண்டனப் பேரணி முற்றவெளியில் நிறைவடையும்.

இந்தப் பேரணியில் கட்சி மற்றும் அரசியல் ரீதியான வேறுபாடுகளைக் கடந்து இந்தப் போராட்டத்தை எதிர்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## அரசை வீழ்த்துவதற்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போதைய அரசு பெரும்பான்மையை இலகுவாக இழக்க நேரிடும்.

ஆளுங்கட்சி வசம் தற்போது 123 ஆசனங்களே உள்ளன. எனவே, இன்னும் 12 பேர் அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டால், அரசு பெரும்பான்மையை இழந்துவிடும்.

தற்போதைய சூழ்நிலையில் 12 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அரசு மீது அதிருப்தியில் உள்ளனர். எனவே, உரிய தருணம் வரும்போது எமது பலத்தைக் காட்டுவோம் - என்றார்.

## அரசை எந்தத் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
7.6 வீதமாகக் குறைவடைந்தமைக்கு நல்லாட்சி அரசே காரணம்.

தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றபோதும் அரசையும் நாட்டையும் வீழ்ச்சியுறச் செய்வதற்காக எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. தற்போதைய சவால் நிலையை நாம் நிச்சயம் எதிர்கொள்வோம் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்- 076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## இது இயற்கை நியதி

இந்த அரசின் ஆட்சி முறைமைக்கு எதிரான மக்களின் அதிருப்தி, கிளர்ச்சியாக உருவெடுத்து திடீரெனப் பெரும் வெடிப்பாகும் என்றும் –

அத்தகைய நிலைமையைப் பொலிஸாரினாலும், பாதுகாப்புப் படையினராலும் கட்டுப்படுத்த இயலாமல் போகும் என்றும் –

ஆளும் கட்சியின் அதிருப்தித் தரப்பு எம்.பியான விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்து இருக்கின்றார்.

அவர் கூறுவது உண்மைதான் என்றாலும், இத்தகைய நிலைமையை ஏற்படுத்தியதில் தாமும் பிரதான பங்காளி என்பதை அவர் மறந்து விடக்கூடாது.

இந்த ஜனாதிபதிக்குக் கட்டுமட்டில்லா அதிகாரத்தை வழங்கும் இருபதாவது அரசமைப்பு திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு காரணமாக இருந்தவர்களில் தாமும் ஒருவர் என்பதை அவர் மறந்து விடக்கூடாது.

புலிகளுக்கு எதிரான வெற்றிக்கான கீர்த்தியை தனித்து ஒரு ராஜபக்ஷ குடும்பம் தட்டிப் பறித்துச் செல்ல அனுமதித்ததன் விளைவுதான் இந்நிலைமை என்று கூற விழைகின்றார் அவர்.

உண்மையில் அந்த வெற்றியில் கீர்த்தியே இல்லை என்பதை அவர் குறிப்பிட மறந்து விட்டார். ராஜபக்ஷக்களின் யுத்த வெற்றி என்பது பெரும் திருகுதாளம்தான். உண்மையான – நேர்மையான – வெற்றி அல்ல அது. மகாபாதகங்களில் எக்காள வெற்றி அது.

அதனால்தான் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித மாண்புகளுக்கு மாறான கொடூரங்கள் குறித்து சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைவாக, பக்கச் சார்பற்ற ஒரு விசாரணை நடைபெற வேண்டும் என்று சர்வதேசம் வலியுறுத்தி நிற்கின்றது. ஜெனிவாவில் அடுத்தடுத்து தீர்மானங்களை நிறைவேற்றிய சர்வதேசம், நீதி முறையான விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்ட தொடர்ந்து வலியுறுத்துகின்றது.

அந்தக் கொடூர – குரூர – அநீதியான – அராஜகமான – வெற்றியை பெரும் ஜெய பேரிகையாக கொண்டாடி, அதற்கான கீர்த்தியை ராஜபக்ஷ குடும்பத்திற்கு தவறான முறையில் வழங்கியதன் விளைவைத்தான் முழு இலங்கை நாடுமே இன்று அனுபவிக்கின்றது.

அந்த யுத்த வெற்றியின் கீர்த்தியை முறையற்ற விதத்தில் தனி ராஜபக்ஷ குடும்பத்திற்கு வழங்கியதன் விளைவே இன்றைய நிலைமை என்று கூறும் விஜயதாஸ ராஜபக்ஷ, அந்த வெற்றியை முறையற்றது, கீர்த்தியற்றது, மாறாக, கொடூரமானது, அநாகரீகமானது என்பதை உரைக்க மறுத்து நிற்கின்றார். அதற்குக் காரணம் உண்டு. விடுதலைப் புலிகளுக்கு எதிரான அந்த யுத்த வெற்றியை பௌத்த, சிங்களத்தின் பெருவெற்றியாகவும் கருதும் விஜயதாஸ ராஜபக்ஷ போன்ற பௌத்த, சிங்கள தீவிர வெறிப்போக்கு கொண்ட பேரினவாதிகள், அந்த யுத்த வெற்றிக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் அசிங்கமான – கோரமான – உண்மைத் தோற்றத்தை அம்பலப்படுத்த விரும்ப மாட்டார்கள்.

அப்படி அம்பலப்படுத்தினால் பஞ்சசீலத்தை போதிக்கும் பௌத்தத்தின் பேரால் இலங்கையில் அரங்கேறியது பஞ்சமாபாதகங்கள்தான் என்ற உண்மை வெளிப்பட்டு விடும் என்று யதார்த்தம் அவர்களுக்கு நன்கு புரியும்.

பேரழிவை ஏற்படுத்தும் யுத்தத்தை வேண்டும் என்றே தமிழர்கள் மீது ஏவிவிட்ட சிங்களம், அதன் விளைவுகளை இன்று அனுபவிக்கின்றது. கர்ம விதிகளுக்கு அமையவே உலகம் இயங்குகிறது என்று பௌத்த தத்துவம் கூறுவதும் இதைத்தான் போலும். கொடூரத்தைக் கீர்த்தி என்று, பெருமையாக யாருக்கு மக்கள் சூட்டினரோ அவர்களாலேயே அந்த மக்கள் இன்று கொடூரத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதுதான் இயற்கை நியதி. இயற்கை நீதியும் கூட.

## காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழு கூட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறப்புற நடந்தது

முல்லைத்தீவு மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான முதலாவது காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக்கூட்டம் மாவட்ட அரச அதிபரும், மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்ட மிடல் குழுவின் தலைவருமான க.விமல நாதனின் தலைமையில் நேற்று (வெள்ளிக் கிழமை) இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப் பாளரும், மாவட்ட காணிப் பயன்பாட்டு திட்ட மிடல் குழுவின் செயலாளருமான கு.முரளீதரனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டு மாவட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள காணி தொடர்பான விவரங்கள் பிரதேச செயலாளர் ரீதியாக ஆராயப்பட்டது.

மேலும் மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவின் காணிக் கோரிக்கைகள் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் இதன்போது புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள காணி உரித்து நிர்ணயித்தல் செயற்றிட்டம் தொடர்பாக காணிப்பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர் கு.முரளீதரனால் விளக்கமளிக்கப்பட்டது.

இதனைவிட இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரச காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் நேர்முகத் தேர்வின் முன்னேற்றம், மண்டலத் திட்டம் தயாரித்தல், தேசிய நில பயன்பாட்டு ஆய்வு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன், மாவட்ட செயலக காணிப்பயன்பாட்டுதிட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர் கு.முரளீதரன், பிரதேச செயலாளர்கள், மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் காணிப்பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர்கள், காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டுள்ளனர்.

## கடற்றொழிலை நம்பி வாழ்ந்த பெண்களுக்கு ஏற்பட்ட அவலம்

### பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத் தலைவர் காட்டம்

கிளிநொச்சி – பூநகரி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் அட்டை வளர்ப்பு தொழில் காரணமாக கடற்றொழிலை நம்பி வாழ்ந்த பெண்களின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டிருப்பதுடன், பண்ணைகளுக்கான அட்டைக் குஞ்சுகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தலைவர் பிரான்சிஸ் ஜோசப் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அட்டை தொழில் வழிமுறைகளால் பலரது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கடற்றொழிலாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

அத்துடன், பெரும் முதலீடுகளைச் செய்து அட்டை பண்ணைகளை அமைத்துள்ள போதும் அவற்றுக்குத் தேவையான அட்டை குஞ்சுகளை பெற்றுக் கொள்வதில் தொடர்ந்தும் சிரமங்கள் காணப்படுகின்றன எனவும், வெளியிடங்களில் இருந்து கொண்டு வரப்படுகின்ற அட்டை குஞ்சுகள் இந்தச் சூழலுக்கு ஏற்றதாக இல்லையென்றும் அவை அழிவடைந்து விடுகின்றன என்றும் கடற்றொழிலாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பூநகரி பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அட்டை வளர்ப்பு தொழில் மிகவும் வருமானந்தரக்கூடிய ஒரு தொழில் முறையாகும். இதனை முன்னெடுக்கும் போது ஏனைய தொழில்கள் பாதிப்படையக் கூடாது என்பதுடன் இன்றைய சூழலில் அட்டைக்குஞ்சுகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டு அட்டைக்குஞ்சு உற்பத்திக்கு பூநகரி வெட்டுகாடு பகுதியில் அட்டை குஞ்சு உற்பத்தி நிலையம் ஒன்றை அமைத்து குஞ்சுகளை உற்பத்தி செய்து வழங்குவதற்கு ஏற்ற வகையிலே அதற்கான காணியைக் கோரிய போது அப்போதைய முதலமைச்சர் காணியைத் தர மறுத்தமையால் பாரிய திட்டம் கைவிடப்பட்டுள்ளது. – என்று தெரிவித்தார்.

## குப்பை சேகரிக்கும் செயற்பாடு கொழும்புப் பகுதிகளில் நிறுத்தம்

கொழும்பின் சில பகுதிகளில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகின்றமையால் குப்பை சேகரிப்பு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

குப்பை சேகரிக்கும் வாகனங்களுக்குத் தேவையான எரிபொருள் இன்மையின் காரணமாக சில பகுதிகளில் குப்பை சேகரிப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மாத தொடக்கத்தில் இதே பிரச்சினையால் நகரம் பாதிக்கப்பட்டது. குறித்த குப்பைகளை அகற்றுவதற்கு வாகனங்களுக்குத் தேவையான எரிபொருள் இன்மை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் இக்பால் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு மாநகர சபை ஆளும் கட்சி உறுப்பினர் ராஜு பாஸ்கர் கருத்து தெரிவிக்கையில் –

நகரின் குப்பைகளை சேகரிப்பதற்கு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளமையால் எங்கிருந்தோ டீசலை கொண்டு வந்து குப்பைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தேவையான பெற்றோல் எமக்குக் கிடைக்காமை காரணமாக கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் குப்பைகளை அகற்றுவதில் பாரிய சிக்கல் நிலை ஏற்பட்டது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் தேவையான பெற்றோல் வெள்ளிக்கிழமை கிடைக்கப்பெற்றது.

எதிர்வரும் ஓரிரு தினங்களுக்குள் கொழும்பு நகரில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். டீசல், பெற்றோல் நெருக்கடி காரணமாக கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட சில பகுதிகளில் ஓரிரு நாள் குப்பை அகற்றும் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாமல் போனது.

வெள்ளவத்தை, கொள்ளுபிட்டி மற்றும் பம்பலபிட்டி ஆகிய பகுதிகளில் ஒரு நாளும் மற்றைய நாள், கோட்டை பகுதியில் குப்பைகளை அகற்ற முடியாது போனது.

குறித்த சிக்கல் நிலையின் காரணமாக நகரின் குப்பைகள் இரு நாள்கள் மாத்திரமே ஆகற்ற முடியாது போனது. ஆனால் தற்போது அவ்வாறான ஒரு சிக்கல் நிலை இல்லை. நாங்கள் நகரின் குப்பைகளை சேகரிப்பதற்கு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளதால் அவர்கள் டீசல் இல்லை என தெரிவித்து குப்பைகளை அகற்றாமல் இருக்க முடியாது. அவர்கள் குப்பைகளை அகற்றியே ஆக வேண்டும் அதற்காக தான் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# விசாலமான வாகனத் தரிப்பிடம் மட்டக்களப்பு நகர மையத்தில்!



புதிதாகத் திறந்து வைக்கப்பட்டது



மட்டக்களப்பு, மார்ச் 26

மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் வேண்டுகோளின் பெயரில் மட்டு நகரில் வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்குடன் புனித அந்தோனியார் வீதி எனும் விலாசத்தில் நகரின் மையப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வாகன தரிப்பிட திறப்பு விழா நிகழ்வு மட்டு., அம்பாறை மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் கலந்துகொண்டு இதனைத் திறந்து வைத்தார்.இவ் வாகன தரிப்பிடத்தின் பெயர் பலகையை ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.

ஒரு தடவையில் இரு நூறுக்கு மேற்பட்ட வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடிய வசதிகள் இங்கு உள்ளன. இதன் மூலம் நகரில் நீண்ட நாள்களாக இருந்து வந்த வாகன இடநெருக்கடி பிரச்சனைக்குத் தீர்வு கிடைத்துள்ளது.

இத் திறப்புவிழா நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேசசெயலாளர் வ.வாசுதேவன், மட்டக்களப்பு வர்த்தக சங்கதலைவர் ஏ.செல்வராஜா மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், அருள் ஒளியில்ல பிரதிநிதிகள், அருட் தந்தையர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 130 ஆவது ஜனதினம் நாளை

## 'ஒஸ்கார்' ஏற்பாட்டில் காரைதீவில் நிகழ்வு



(காரைதீவு சகா)

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 130 ஆவது ஜனதினம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகும். 1892. 03.27ஆம் திகதி இப்பூவுலகில் அவதரித்திருந்த சுவாமிகளது 130ஆவது ஜனன தினம் நாளை கொண்டாடப்படவிருக்கிறது.

இத்தினத்தை முன்னிட்டு அவர் பிறந்த காரைதீவு மண்ணில் ஒஸ்கார் ( AUSKAR - ஆஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியம்) சுவாமி விபுலாநந்தர் நினைவுப் பேருரையுடன் கூடிய பரிசளிப்புவிழாவை நாளை ஞாயிறன்று காரைதீவு விபுலாநந்த மணி மண்டபத்தில் நடாத்தவுள்ளதாக ஒஸ்கார் தலைவர் வீ.விவேகானந்தமூர்த்தி(ஆஸ்திரேலியா) தெரிவித்தார்.

சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் முதன்மை அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் மற்றும் திருமுன்னிலை அதிதியாக இராம கிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தா ஜீ மஹாராஜ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

'தமிழ்க் கல்வியும் தமிழில் கல்வியும்' என்ற மகுடத்தில் சுவாமி தொடர்பான நினைவுப்பேருரையை கிழக்கு பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் சி.மௌனகுரு நிகழ்த்தவுள்ளார். கௌரவஅதிதிகளாக காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கி.ஜெயசிறில், பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் செ.புவனேந்திரன் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். மேலும் சிறப்பு அதிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

சுவாமியின் 130ஆவது ஜனனதினத்தையொட்டி ஒஸ்கார் அமைப்பினர் ஏலவே காரைதீவுக் கோட்டத்திலுள்ள தமிழ் முஸ்லிம் பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, சித்திரம், பாவோதல் ஆகிய தமிழ் இலக்கிய ஆக்கத்திறன் போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தியிருந்தனர். போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவர்க்கான பெறுமதிமிக்க பரிசுகள் நாளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒத்துழைத்த ஒஸ்கார் சர்வதேச இலங்கை மற்றும் காரைதீவு குழுவினருக்கு நன்றிகள் என ஆஸ்திரேலியாவிலிருந்து ஒஸ்கார் செயலாளர் கட்டடக்கலை நிபுணர் அ.மகேந்திரன் தெரிவித்தார்.

# கல்லடிப் பாலத்தின் கீழ் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டது

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தின் கீழ் நீரில் மூழ்கிய நிலையில் கடந்த 22 ஆம் திகதி மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண் பெரியஊறணி மட்டக்களப்பைச் சேர்ந்த செல்வரெத்தினம் றேணுகாதேவி (வயது 59) என இனங்காணப்பட்டார். இவர் கடந்த 20 ஆம் திகதி தனது வீட்டிலிருந்த ஓட்டோ ஒன்றில் மட்டக்களப்பில் உள்ள தனியார் வைத்தியசாலைக்குச் சென்றவர் வீடு திரும்ப வில்லை எனக் கூறப்பட்டது .பின்னர் கடந்த 22 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார்.

அவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கிளிநொச்சியில் வசித்து வரும் அவரின் மகள் தனது தாயார் என சடலத்தை அடையாளம் காட்டியுள்ளார்.

மரணமானவர் தாம் எழுதிய கடிதத்தில் தனது மரணத்திற்கு யாரும் காரணமில்லை, தான் நோய் வாய்ப்பட்டிருப்பதனால் இந்த முடிவை எடுத்துள்ளேன்



எனக் குறிப்பிட்டுள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற் நீதிவான் ஏ.சி. றிஸ்வானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டார். சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸார் மற்றும் சட்டவைத்திய அதிகாரி ஆகியோருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காசநோய் விழிப்புணர்வு நிகழ்வுகள் வாழைச்சேனை வைத்தியசாலையில்





உலக காசநோய் தினம் (மார்ச் – 24) தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் மட்டக்களப்பு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், காசநோய் கட்டுப்பாட்டு பிரிவு, ஓட்டமாவடி மற்றும் கோறளைப்பற்று மத்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

காசநோயில் இருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகப் பகுதியில் இருந்து பிரதான வீதி வழியாக ஒன்றும் மற்றையது ஓட்டமாவடி பிரதான வீதி வழியாகவும் வந்து வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையைச் சென்றடைந்ததன.

ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் 'காசநோய் என் வாழ் நாளில் இல்லாது ஒழிப்போம்' என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தியிருந்தனர். அத்துடன் காசநோயில் இருந்து மக்கள் பாதுகாப்பு பெறுவது தொடர்பான அறிவித்தல் ஒலிபெருக்கி சாதனத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. இந்த ஊர்வலத்தில் பிரதேச வைத்தியர்கள். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார சேவை உத்தியோகஸ்தர்கள், பாடசாலை மணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தின் இறுதியில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் காசநோயின் தாக்கம் தொடர்பான விழிப்புணர்வு உரைகள் அதிதிகளாக கலந்து கொண்ட வைத்தியர்களினால் ஆற்றப்பட்டன.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் என்.மயூரன், காசநோய்க்கான விசேட வைத்திய நிபுணர் நாலங்க கொடவெல, மார்பு தொற்று நோய் பொறுப்பதிகாரி வைத்தியர் ஆரணி மற்றும் பிரதேச வைத்தியர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# டுபாய் கண்காட்சியில் தமிழ்நாட்டு அரங்கு திறந்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்



தமிழகத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக நான்கு நாள் பயணமாக மாநில முதல்வர் மு.க.ஸ்டாலின் டுபாய் சென்றுள்ளார். அங்கு, ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதாரத்துறை அமைச்சர் அப்துல்லா பின் டுக் மார்ரி, வெளிநாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் டாக்டர் தானி பின் அகமது அல் சியோதி ஆகியோரை அவர் சந்தித்து பேசியுள்ளார். அப்போது தமிழகத்தில் பல்வேறு துறைகளில் முதலீடு மேற்கொள்வது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு நிலவும் சாதகமான சூழ்நிலையை எடுத்துக்கூறி, ஐக்கிய அரபு அமீரகத்தின் இரு அமைச்சர்களையும் தமிழகம் வருமாறு மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார். மேலும், தமிழகத்தில் தொழில் தொடங்கிட, முதலீட்டாளர்களின் குழுவினையும் தமிழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதன் பின்னர் டுபாயில் நடந்துவரும் சர்வதேச தொழில் கண்காட்சிக்கு சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு அரங்கை அவர் திறந்து வைத்துள்ளார். அந்த அரங்கின் முகப்பில் 'மேட் இன் தமிழ்நாடு' என்ற இலச்சினை அமைக்கப்பட்டு உள்ளது. அந்த அரங்கை திறந்து வைத்த பிறகு கண்காட்சியில் தமிழ்நாட்டு வாரக் கொண்டாட்டத்தையும் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தொழில்துறை, மருத்துவம், சுற்றுலா, கலை, கலாச்சாரம், கைத்தறி, கைவினைப் பொருள்கள், ஆடைகள், தமிழ் வளர்ச்சி, தகவல், மின்னணுவியல், தொழிற்பூங்காக்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற முக்கிய துறைகளில் தமிழ்நாட்டின் சிறப்பை உலகிற்கு எடுத்துக்காட்டும் வண்ணம் காட்சிப் படங்கள் இந்த அரங்கில் தொடர்ச்சியாக திரையிடப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு மோட் குடார் வாகனங்கள் மற்றும் அதன் உதிரிப்பாகங்கள், மின்சார வாகனங்கள் மற்றும் மின்னணுவியல் சாதனங்கள், காற்றாலைகள் உள்பட பல்வேறு துறைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் உருவங்களும் இந்த அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## கூட்டுறவு சங்க அதிகாரத்தை பறிப்பதாக தி.மு.க. அரசுக்கு அ.தி.மு.க கண்டனம்

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூட்டுறவு சங்க இயக்குநர்களின் அதிகாரத்தை பறிக்கக்கூடாது என தி.மு.க .அரசுக்கு வலியுறுத்தல் விடுத்துள்ளார்.

தமிழ்நாட்டில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும், என்பதற்காக பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட மாநில சுயாட்சி என்ற முழக்கம், பின்னர் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என மாறி, இதனை அனைத்து பிராந்திய கட்சிகளும் ஆதரிக்கும் நிலை தற்போது இந்தியா முழுவதும் உருவாகியிருக்கிறது. இதற்குக் காரணம், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டால்தான் மாநில அரசுகள் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளை செவ்வனே பணியாற்ற முடியும் என்பதுதான்.

இந்த முறை மாநில அரசுகளுக்கு கீழேயுள்ள உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றிலும் பின்பற்றப்பட வேண்டும். இதுதான் உண்மையான ஜனநாயகத்திற்கும், கூட்டாட்சி தத்துவத்திற்கும் எடுத்துக்காட்டு. ஆனால், தற்போதைய தி.மு.க. ஆட்சியில் இதற்கு நேர்மாறான சூழ்நிலை நிலவுகிறது. இதிலும் தி.மு.க. இரட்டை வேடம் போடுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள இயக்குநர்கள், தலைவர்கள் அனைவரும் ஜனநாயக முறையில் அதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். இவர்களின் பதவிக்காலத்தை குறைக்க வேண்டும் என்பதற்காக 2022 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச) சட்டமுன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றப் பேர வையில் இயற்றிய அரசு தி.மு.க. அரசு. சட்டப்படி ஐந்தாண்டுகள் வகிக்க வேண்டிய பதவியை மூன்றாண்டுகளாக குறைப்பது கூட்டாட்சித் தத்து வத்திற்கு எதிரானது இல்லையா? ஜனநாயகத்திற்கு எதிரானது இல்லையா?

மேற்படி சட்டத்திற்கான ஒப்புதல் பெறப்படாத சூழ்நிலையில், கூட்டுறவு சங்கத் தலைவர்களின் கையெழுத்து போடும் அதிகாரத்தினை குறைக்கும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களால் 22-03-2022 அன்று ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, தொடக்க கூட்டுறவுக் கடன் சங்கங்களால் வழங்கப்படும் காசோலைகளில் சங்கத் தலைவரின் கையொப்பம் தனியாகவோ அல்லது சங்கச் செயலாளருடன் கூட்டாகவோ பெற வேண்டிய அவசியம் இல்லை என்றும், சங்கத்தின் ஒழுங்குமுறை விதிகளில் சங்கத் தலைவரின் கூட்டுக் கையொப்பம் பெற வேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருந்தால் அதனை உடனடியாக நீக்கறவு செய்ய வேண்டுமென்றும், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வழங்கும் காசோலைகளில் சங்கச் செயலாளர் மற்றும் செயலாளருக்கு அடுத்த நிலையில் பணிபுரியும் பணியாளர் கூட்டாக கையொப்பமிட வேண்டுமென்றும், செயலாளரைத் தவிர வேறு பணியாளர் இல்லாத சங்கங்களைப் பொறுத்தவரையில், செயலாளரும், தலைமையிட நியாயவிலைக் கடை விற்பனையாளர் அல்லது இதர பணியாளர் இருப்பின் இருவரும் கையொப்பம் இடவேண்டும் என்றும், இதற்கென ஒழுங்குமுறை விதிகளில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறும், சங்கத் தலைவர் கையொப்பமிட்டு காசோலை அனுப்பினால் பணப்பரிவர்த்தனை செய்ய வேண்டாம் என்றும் அனைத்து கூட்டுறவு வங்கிகளும் அறிவுறுத்தப்பட்டு உள்ளன.

கூட்டாட்சி தத்துவம் பற்றியும், ஜனநாயகம் குறித்தும் அண்மைக் காலமாக குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் தி.மு.க., கூட்டாட்சிக்கும், ஜனநாயகத்திற்கும் எதிராக செயல்படுவது நியாயமா? தி.மு.கவின் இந்தச் செயலுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடும் தி.மு.க., தனக்கு கீழுள்ள கூட்டுறவு சங்க இயக்குநர்களின் அதிகாரங்களை பறிப்பதும், அவர்களின் பதவிக் காலத்தின் அளவைக் குறைப்பதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனவே, ஜனநாயகத்தை நிலை நாட்டும் வகையில், கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களின் பதவிக் காலத்தை குறைப்பது மற்றும் அவர்களது அதிகாரத்தை பறிப்பது போன்ற முடிவுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறேன், என்று ஓ.பன்னீர் செல்வம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



## முன்னாள் எம்.எல்.ஏக்களுக்கு ஒரு முறை மட்டுமே ஓய்வூதியம்

### பஞ்சாப் முதல்வர் அறிவிப்பு

பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் பதவியேற்ற பிறகு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். முன்னாள் எம்.எல்.ஏக்களின் ஓய்வூதியத்திலும் மாற்றம் செய்து அவர் உத்தரவிட்டுள்ளார்.

மாநிலத்தில் எம்.எல்.ஏ. ஒரு முறை ஓய்வூதியமாக மாதம் 75,000 ரூபாவைப் பெறுகிறார். அதன்பிறகு, ஒவ்வொரு அடுத்தடுத்த காலத்திற்கும் ஓய்வூதியத் தொகையில் 66 சதவீதம் கூடுதலாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த நடைமுறையை நீக்கி பகவந்த் மான் சட்டத் திருத்தத்தை கொண்டு வந்துள்ளார்.

எம்.எல்.ஏக்கள் உள்பட அரசியல் தலைவர்கள் சேவை செய்ய எங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள் என்று கூப்பிய கரங்களுடன் உங்களிடம் வாக்கு கேட்கிறார்கள்.

ஆனால், மூன்று முறை, நான்கு முறை, ஐந்து முறை வெற்றிபெற்ற பல எம். எல். ஏக்கள் தேர்தலில் தோல்வியடைந்த பிறகும் தேர்தலில் போட்டியிட்டு சீட்டு கிடைக்காமல் போனபின்பும், மாதந்தோறும் லட்சக்கணக்கான ரூபா ஓய்வூதியத்தைப் பெறுகிறார்கள் என்பதை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

ஒருவருக்கு மூன்றரை லட்சமும், ஒருவருக்கு நான்கரை, இன்னொருவருக்கு ஐந்தேகால் லட்சமும் ஓய்வூதியமாக கிடைக்கின்றன. இது கருவூலத்தில் கோடிக்கணக்கான ரூபா நிதிச் சுமையை ஏற்படுத்துகிறது.

அதனால், பஞ்சாபில் உள்ள முன்னாள் எம்.எல்.ஏக்கள் 2 முறை, 5 முறை அல்லது 10 முறை வெற்றி பெற்றாலும், இனி ஒருமுறை மட்டுமே ஓய்வூதியத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படுவார்கள். இது அவர்களது குடும்ப ஓய்வூதியத்திலும் குறைக்கப்படும். அதில் சேமிக்கப்படும் பணம் மக்களின் நலனுக்காக செலவிடப்படும், என்று பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்திருக்கிறார்.

## அம்பேத்கரின் பிறந்தநாளை தேசிய விடுமுறை நாளாக அறிவிக்க மக்களவையில் திருமாவளவன் கோரிக்கை

மக்களவையில் நேற்று நிதி மசோதா மீதான விவாதத்தில் பங்கேற்று, விடுதலை சிறுத்தைகள் கட்சி எம்.பி. திருமாவளவன் உரையாற்றியபோது, அம்பேத்கரின் பிறந்த நாளை தேசிய விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும், என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அம்பேத்கரின் சிந்தனைகளை அனைத்து இந்திய மொழிகளிலும் கொண்டு சேர்க்க வேண்டும். அம்பேத்கர் பெயரிலான தொண்டு நிறுவனத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். சமூக நீதியை மக்களிடையே சேர்க்க வேண்டும் என்றால் அம்பேத்கர் தொண்டு நிறுவனம் இயங்க வேண்டும். பட்டியலின மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையை தீர்மானித்து மாநிலங்களுக்கு வழங்க வேண்டும். சமூகநீதித் துறைக்கான நிதி ஒதுக்கீடு தற்போது குறைக்கப்பட்டிருக்கிறது. அதனை உயர்த்த வேண்டும். சாதிமறுப்புத் திருமணம் செய்வோருக்குத் தொடர்ந்து ஊக்கத்தொகை வழங்க வேண்டும், என்றும் திருமாவளவன் தனது உரையில் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# பாடசாலைக்குள் புகுந்து ஆசிரியர் மீது தாக்குதல்!

வவுனியா செட்டிக்குளம் வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் மீது மூன்று நபர்கள் இணைந்து தாக்குதல் மேற்கொண்டதில் படுகாயமடைந்த ஆசிரியர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்று (வெள்ளிக்கிழமை) பாடசாலை ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் காலை 8.40 மணியளவில் பாடசாலைக்குள்சென்றமூன்றுநபர்கள்இணைந்து பாடசாலை வளாகத்தில் நின்ற ஆங்கில பாட ஆசிரியரான சாந்தகுமார் (வயது- 45) என்பவர் மீது கட்டையால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

மற்றைய ஆசிரியர் இதனை கண்டதும் அவர்கள் அங்கிருந்து தப்பித்துச்சென்றுள்ளனர்.

தலையில் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் காணப்பட்ட ஆசிரியர் சக ஆசிரியர்களின் உதவியுடன் செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த செட்டிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமையுடன் பாடசாலையில் பழைய மாணவர்கள் , ஆசிரியர்கள் ஒன்று கூடியுள்ளமையால் பதட்ட நிலைமை நிலவி வந்த துடன் பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

# உருளைக்கிழங்கு அறுவடை புன்னாலைக்கட்டுவனில்!

புன்னாலைக்கட்டுவனில் வெற்றிகரமாக உருளைக் கிழங்கு அறுவடை நிகழ்வு இடம்பெற்றது. யாழ்.மாவட்ட பொருளாதாரத்தை யாழ். விவசாயிகள் மீண்டும் கட்டமைப்பார்கள் என்று பலராலும் பேசப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் நவீன முன்மாதிரி முறையில் மேற்கொள்ளப்பட்ட உருளைக் கிழங்கு செய்கையின் அறுவடை நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) புன்னாலைக்கட்டுவன், ஈவினை மத்தி கிராமத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் அவர்களின் இணைப்புச் செயலாளர் குலேந்திரன் சிவராம் பிரதம விருந்தினராக கலந்துகொண் டார்.

சொட்டு நீர்ப்பாசனம், உயர் பாத்தி மற்றும் பொலித்தீன் மூடுபடை தொழில்நுட்பத்தின் கீழ் இந்த முன்மாதிரி உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. கடந்த 01.01.2022 அன்று 8 பரப்பு விஸ்தீரண காணியில் 45cm x 30 cmநடுகை இடைவெளியில் 'சசி' இன உருளைக்கிழங்குகள் இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் பயிரிடப்பட்டன.

இந்த அறுவடை நிகழ்வில் உரையாற்றிய குலேந்திரன் சிவராம் –

விவசாய பிரதி அமைச்சராக அங்கஜன் இராமநாதன் சேவையாற்றிய காலத்தில், உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கு மானியம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டிருந்தார். அதன்படி, நவீன முன்மாதிரி முறையில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் மாமரச் செய்கை, மிளகாய்ச் செய்கை, உருளைக்கிழங்கு செய்கைகளுக்காக மானியங்களை பெற்றுக்கொடுத்தோம்.

இவ்வாறு நவீன முன்மாதிரி முறையில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கைகளுக்கு மானியங்களை வழங்குவது கூடிய அர்த்தம் மிக்கதாகிறது. தற்போதுள்ள நிலையில் செலவுகளை கட்டுப்படுத்தி விவசாயம் மேற்கொள்ளும் போதே விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும். மீண்டுமொரு விவசாய யுகத்தில் நாம் நுழைந்திருக்கிறோம்.

ஸ்ரீமாவோ காலத்தில் எமது மண்ணில்கல்வீடுகள்கட்டப்படாமை போல எமது மண்ணின் விவசாயிகளால் சவால்களை தாண்டிய வெற்றியை பதிவு செய்யமுடியும். விவசாயிகளை நம்பியே எமது இலங்கை தேசம் உள்ளது, விவசாயிகள் உணவுப்பற்றாக்குறையை ஒருபோதும் ஏற்படவிடமாட்டார்கள். எனவே அதிகளவு பணப்பயிர்களையும் உணவுப் பயிர்களையும் பயிரிட்டு இந்த பொருளாதார நெருக்கடியை விவசாய வெற்றியின் ஊடாக மீட்டெடுப்போம். - எனத் தெரிவித்தார்.

நிகழ்வில், வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர், மாகாண விவசாய பிரதி பணிப்பாளர், கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிக பணிப்பாளர், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய பணிப்பாளர், விவசாய நவீனமயமாக்கல் திட்ட விவசாய விஞ்ஞானி, விவசாய போதனாசிரியர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வவுனியா அழகக கூட்டுறவு சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

வவுனியா அழகக கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியா, உள்வட்ட வீதியில் அமைந்துள்ள பலநோக்கு பயிற்சி நிலையத்தில் குறித்த இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

மேற்படி பொதுக் கூட்டம் காரணமாக அன்றைய தினம் வவுனியா மாவட்டத்தில் உள்ள அழகக நிலையங்கள் பூட்டப்பட்டிருக்கும் எனவும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். 100

# இரண்டு எரிபொருள் கப்பல்கள் வருகை!

கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் 12 நாள்களாக நங்கூரமிட்டிருந்த டீசல் ஏற்றி வந்த கப்பலுக்கான பணம் செலுத்தப்பட்டதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக 20 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை ஏற்றிச் வந்த கப்பல் சுமார் 12 நாள்களாக கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் நங்கூரமிட்டிருந்தது.

கப்பலின் உரிமையாளரான சிங்கப்பூர் நிறுவனத்துக்கு 4 கோடியே 20 லட்சம் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டதை அடுத்து டீசலை இறக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

35 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலை ஏற்றிக்கொண்டு மற்றுமொரு கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

குறித்த பெற்றோல் தொகை இந்தியகடன்வசதியின்கீழ்பெறப்பட்டது.



# யாழ். சிறுவர் நீதிமன்றத்துக்கு முன்னால் உள்ள வீட்டில் சமையல் எரிவாயு திருட்டு!

யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்துக்கு முன்னால் உள்ள வீட்டில் சமையல் எரிவாயு திருடப்பட்டுள்ளது.

நீதிமன்ற காவலர்கள் கடமையில் உள்ள போது இந்தத் திருட்டுசம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வீட்டு உரிமையாளரிடம் வினவியபோது இரண்டாவது தடவையும் எரிவாயு சிலிண்டர் திருடப்பட்டதாகவும் எரிவாயுசிலிண்டர்வெடிப்புசம்பவங்கள் இடம்பெற்றதை தொடர்ந்து தாம் எரிவாயு சிலிண்டரை வீட்டின் வெளியே பொருத்தியிருந்த நிலையிலேயே இந்தத் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் நீதிமன்ற காவலில் இருந்த பொலிஸாரிடம் வினவியபோது தமது கடமை நீதிமன்ற எல்லைக்குட்பட்டதாக தெரிவித்தனர் என குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளால் பல திருட்டு, கொள்ளை, கொலை என பல சமூக விரோதச் செயல்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# கொழும்பில் தீ விபத்து; 21 வீடுகள் எரிந்து நாசம்!

கொழும்பு 14, கஜிமாவத்த பகுதியில் வியாழக்கிழமை இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 21 வீடுகள் சேதமடைந்துள்ளன.

கஜிமாவத்தை பகுதியில் உள்ள வீடொன்றில் வியாழன் நள்ளிரவு 12 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பின்னர் அருகில் உள்ள வீடுகளுக்கும் தீ பரவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீ முற்றாக அணைக்கப்பட்டுள்ளதுடன், தீயை அணைக்க ஏழு தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2022இல் வெளியிடப்பெற்றது.